நிபந்தனைகள்: 1. தமிழ்நாடு ஒன்றியங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விதிமுறைகளை கடைபிக்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
3. ஒப்பந்தப்புள்ளிகளை முத்திரையிடப்பட்ட உறையில் மட்டுமே செலுத்த வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளி பேரூராட்சி அலுவலர்களின் அனுமதிக்கு உட்பட்டது.

நகலை: வடுகபட்டி பேரூராட்சி, சமூக மாவட்டம் செ.ம.எ.தொ.கி./6358/ ஒப்பந்தப்புள்ளி / 2023 செயல் அலுவலர், வடுகபட்டி பேரூராட்சி, சமூக மாவட்டம்

தமிழ்நாடு அரசு

**கன்னியாகுமரி மாவட்டம், வெள்ளிமலை பேரூராட்சி**

**ந.க.எண். 152 /2023/அ1** **ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்** **நாள். 24.11.2023**

கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிமலை இரண்டாம் நிலை பேரூராட்சியில் நமாறு நிதி உதவி திட்டம் (RIDF-XXIX) 2023-2024 ல் கீழ்கண்ட வேலைகளை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் 12.12.2023 செவ்வாய்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணி வரை, கீழ்கண்ட இணையதளத்தில் **http://tntenders.gov.in** பதிவேற்றம் செய்யலாம். வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் 12.12.2023 செவ்வாய்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தருகிறக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். வேலைகளான ஒப்பந்தபுள்ளி படிவங்கள் 12.12.2023 செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை கீழ்குறிப்பிட்ட இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் **http://tntenders.gov.in** மேற்படி பணிகள் மற்றும் ஒப்பந்தபுள்ளி சம்பந்தமான விவரங்கள், ஒப்பந்ததாரர் நகதி விவரங்கள் அலுவக வேலை நாட்களில் பேரூராட்சி அலுவகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**நமாறு நிதி உதவி திட்டம் (RIDF-XXIX) 2023-2024**

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | பெயனாேதாகை | வேலை முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | மாவினை முதற்கண்ணம் முதல் ஆறுகிணறை காண் வெல்லும் தார் சாலை மேம்பாடு செய்தல். | 92.00 | 92000 | 3 மாதம் |
| 2 | வெள்ளோடு முதல் உறப்பாளியை செல்லும் தார் சாலை மேம்பாடு செய்தல் | 137.00 | 137000 | 3 மாதம் |

**தலைவர்**
**இரண்டாம்நிலை பேரூராட்சி,**
**வெள்ளிமலை**

**செ.ம.தொ.கி / 6379 / ஒப்பந்தப்புள்ளி /2023**

**செயல் அலுவலர்,**
**இரண்டாம்நிலை பேரூராட்சி,**
**வெள்ளிமலை**

GOVERNMENT OF TAMILNADU
**Town Panchayat Administration**
**Madurai District**
**Peraiyur Town Panchayat**
**NABARD SCHEME (RIDF-XXIX) 2023-2024**

**ROC . NO. 591 / 2023** **Tender Notice** **Date.23.11.2023**

1.Complete Tender Details Visit us http://tntenders.gov.in
2.E Tender (Double Cover System) Invited for BT Road work (One) Rs.192.00 Lakhs By Executive Officer, Peraiyur Town Panchayat.
3.Package Wise Tender Schedule can be downloaded from **http://tntenders.gov.in,**during this period 24.11.2023 To 12.12.2023.

| 4. | | |
|---|---|---|
| | A) Last Date To download and Online submit the E–Tender | 12.12.2023 Evening 3.00 PM |
| | B) Tender Opening Date & Time: | 12.12.2023 Evening 3.30 PM |

**DIPR / 6359/ TENDER / 2023**

**Executive officer,**
**Peraiyur Town Panchayat, Madurai District.**

## AVANSE FINANCIAL SERVICES LIMITED

**Registered Address:** 001 & 002, Fulcrum Business Center- A Wing, Near Hyatt Regency Hotel, Ashok Nagar, Sahar Road, Andheri (E), Mumbai 400 099
**Branch Address:** Avanse Financial Services Ltd. No 309, 2nd Floor, Bay City Centre, Poonamallee High Rd, above Maruti Kapico Showroom, Kilpauk, Chennai, Tamil Nadu 600010

### SALE NOTICE/ E-AUCTION

**(Under Rule 8(6) read with Rule 9(1) of the Security Interest (Enforcement) Rules 2002)**

1st E-Auction 30 DAYS Sale Notice for Sale of Immovable Assets under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 read with proviso to Rule 8 (6) and Rule 9(1) of the Security Interest (Enforcement) Rules, 2002. 30 days Notice is hereby given to the public in general and in particular to the Borrower (s) and Co-Borrower(s), or their legal heirs/ representatives that the below described immovable property mortgaged/charged to the Secured Creditor, the Physical Possession of which has been taken by the Authorised Officer of Avanse Financial Services Ltd (AFSL) on 26th September, 2023, will be sold on **"As is where is", "As is what is", "Whatever there is"** and **without recourse basis"** on **29/12/2023,** for recovery of **Rs. 57,68,479/- (Rupees Fifty Seven Lakhs Sixty Eight Thousand Four Hundred & Seventy Nine Only)** outstanding as on **25th November 2021.** along with further Interest and additional/Penal Interest from 26th November, 2021, due to the Secured Creditor i.e. Avanse Financial Services Ltd. from **Sri Devi Educational and Charitable Trust (through its Managing Trustees), as Borrower, M. Satheesh Kumar, Manickavasagam A, Ponnuthai K, Saranya Devi as the Co-Borrowers.**

The reserve price will be **Rs. 75,00,000/-** & the earnest money deposit will be Rs 7,50,000/-

| Description of Secured Asset | Type of Possession | Reserve Price (Rs)/ Incremental Amount | Earnest Money (Rs) | Date of Inspection |
|---|---|---|---|---|
| All that piece and parcel of the land and building situated at Anayampatti Village, Gangavalli Tk, Salem Dt., admeasuring 

### 46வது பிறந்த நாள்

# முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் உதயநிதி வாழ்த்து பெற்றார்

■ நடிகர் கமல், அமைச்சர்கள், திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் நேரில் வாழ்த்து
■ தமிழகம் முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது

**சென்னை, நவ.28:** திமுக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தனது பிறந்தநாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அவருக்கு நடிகர் கமல், அமைச்சர்கள், திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் வாழ்த்து தெரிவித்தனர். மேலும் திமுக சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

திமுக இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தனது 46வது பிறந்தநாளை நேற்று கொண்டாடினார். பிறந்தநாளை முன்னிட்டு தனது தந்தையும், திமுக தலைவருமான முதல்வர் மு.க.ஸ்டாலின், தாயார் துர்கா ஸ்டாலின் ஆகியோரை நேரில் சந்தித்து ஆசி பெற்றார். அப்போது உதயநிதிக்கு சால்வை அணிவித்து, உச்சி முகர்ந்து மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார். உதயநிதி ஸ்டாலின், முதல்வருக்கு சால்வை அணிவித்து புத்தகம் பரிசாக வழங்கினார்.

இது தொடர்பாக உதயநிதி ஸ்டாலின் தனது டிவிட்டர் பதிவில், "எனது பிறந்தநாளை முன்னிட்டு, ஈன்றெடுத்த பெற்றோர் திமுக தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலினிடமும்-அன்னையாரிடம் வாழ்த்துகளை பெற்றேன். அயராது உழைக்கவும்-அன்பின் வழி நடக்கவும் எந்நாளும் வழிநடத்தும் தாய் - தந்தையரின் வாழ்த்தை பெற்ற மகிழ்வான தருணத்திலிருந்து இந்த நாளை தொடங்குவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் மெரினா கடற்கரையில் அண்ணா, கலைஞர் நினைவிடத்துக்கு சென்று அஞ்சலி செலுத்தினார். இதில், பொன்முடி, மு.பெ.சாமிநாதன், தா.மோ.அன்பரசன், கே.ஆர்.பெரியகருப்பன், பி.கே.சேகர்பாபு, சிவ.வீ.மெய்யநாதன், சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்ட அமைச்சர்கள், தயாநிதி மாறன் எம்பி, இ.பரந்தாமன், மயிலை த.வேலு, மாதவரம் சுதர்சனம், தாயகம் கவி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, இ.கருணாநிதி, ஐட்ரீம் மூர்த்தி, ஜோசப் சாமுவேல், ஆர்.டி.சேகர் உள்ளிட்ட எம்எல்ஏக்கள், மாவட்ட செயலாளர்கள் இளையஅருணா, சிற்றரசு, பகுதி செயலாளர் மதன் மோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதையடுத்து கோபாலபுரத்தில் உள்ள கலைஞர் இல்லம் மற்றும் சிஐடி காலனி இல்லத்திற்கு சென்று கலைஞர் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். வேப்பேரியில் உள்ள தந்தை பெரியார் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். முன்னதாக உதயநிதி ஸ்டாலினுக்கு திமுக பொது செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, துணை பொது செயலாளர்கள் கனிமொழி எம்பி, பொன்முடி, ஆ.ராசா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், கே.கே.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எம்பி கவுதம சிகாமணி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ. வழக்கறிஞர் கே.வி.சிட்டிபாபு, தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் தலைவர் கு.தியாகராஜன், சென்னை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ராமபுரம் வி.ராஜேஷ், சென்னை கிழக்கு மாவட்ட சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் எஸ்.எம்.ஜாவித் உள்ளிட்ட நிர்வாகிகள், தொண்டர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை ஒரு மாதம் கொண்டாட இளைஞர் அணியினர் திட்டமிட்டுள்ளனர். தமிழகம் முழுவதும் நேற்று பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நடிகரும், மக்கள் நீதி மய்யத் தலைவருமான கமல்ஹாசன், கவிஞர் வைரமுத்து ஆகியோர் போனில் வாழ்த்து தெரிவித்தனர். தமிழக காங்கிரஸ் துணை தலைவர் கோபண்ணா, காங்கிரஸ் எஸ்.சி.பிரிவு தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் ஆகியோர் நேரில் வாழ்த்து தெரிவித்தனர். பல்வேறு தலைவர்கள் சமூக வலைத்தளம் மூலம் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

▶ முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், தனது பிறந்தநாளை முன்னிட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து வாழ்த்து பெற்றார். அருகில், துர்கா ஸ்டாலின்.

### மக்கள் தொகை கணக்கெடுப்புடன்

# சாதிவாரி கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும்

## வி.பி.சிங் சிலை திறப்பு விழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

**சென்னை, நவ.28:** மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும் என சென்னையில் நடந்த வி.பி.சிங் சிலை திறப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் முழுஉருவ சிலையை திறந்து வைத்து, சென்னை, கலைவாணர் அரங்கில் நடந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

150 ஆண்டு பழமை வாய்ந்த மாநில கல்லூரி வளாகத்தில், வி.பி.சிங்கின் அருமை நண்பர், கலைஞர் நீடுதுயில் கொண்டிருக்கின்ற கடற்கரை சாலையில் சமூகநீதியின் சின்னமாம் வி.பி.சிங் சிலை அமைக்கப்பட்டுள்ளது. எங்களுடைய அழைப்பை ஏற்று, இங்கு வந்துள்ள வி.பி.சிங் மனைவி சீதா குமாரிக்கும், அவருடைய மகன் அஜயா சிங்குக்கும் உங்களுடைய அனைவரின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வி.பி.சிங் சிலை வைப்பது மூலமாக அவருடைய புகழ் உயருகிறது என்று பொருள் இல்லை; நாம் அவருக்கு காட்ட வேண்டிய நன்றியை காட்டி இருக்கிறோம்.

காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூகநீதி கதவை திறந்து வைத்தவர் வி.பி.சிங். தன்னுடைய பிரதமர் பதவி போனாலும் பரவாயில்லை என்று அதில் உறுதியாக இருந்தவர் வி.பி.சிங். அவர் பிறப்பால் பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் அல்ல. ஏன், ஏழை எளிய குடும்பத்தை சேர்ந்தவரும் அல்ல. ஆனாலும் ஏழை - எளிய, பிற்படுத்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இடஒதுக்கீட்டை சாத்தியப்படுத்தி காட்டியவர். அப்போது நாடாளுமன்றத்தில் பெரியார், அம்பேத்கர், ராம் மனோகர் லோகியா ஆகிய மூவருடைய பெயரைத்தான் வி.பி.சிங் குறிப்பிட்டார். பெரியாருக்கு தனிப்பட்ட நன்றியை நாடாளுமன்றத்தில் பதிவு செய்தார். பதவியில் இருந்த பதினோரு மாத காலத்தில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு தொடக்கப்புள்ளி, தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திற்கு தொடக்கப்புள்ளி, வேலை உரிமையை அரசியல் சாசன உரிமை உருவாக்கியது, லோக்பால் சட்டத்துக்கு தொடக்க முயற்சிகள், தேர்தல் சீர்திருத்தங்கள், அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது, நாடாளுமன்றத்தின் நடுவே அம்பேத்கர் படம், மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சில், உழவர்கள் பிரச்னையை தீர்க்க மூன்று குழுக்கள், டெல்லி குடிசைப்பகுதி மக்களுக்கு வாழ்விடங்கள், அதிகபட்ச சில்லறை விற்பனை விலை அச்சிட உத்தரவு, நுகர்வோர் பாதுகாப்பு - இன்னும் பட்டியல் நிறைய இருக்கிறது.

சமூகநீதியின் காவலரான வி.பி.சிங்குக்கு சிலை வைத்ததன் மூலமாக தமிழ்நாடு அரசு இன்றைக்கு பெருமை அடைகிறது. சமூகநீதி பயணத்தில் நாம் செல்ல வேண்டிய தூரம் மிக அதிகம். சமூகநீதி என்பது ஒரு மாநிலத்தின் பிரச்னை இல்லை; எல்லா மாநிலங்களின் பிரச்னை. ஒவ்வொரு மாநிலத்துக்கும் சாதி - வகுப்பு அளவீடுகள் வேறுபடலாம். ஆனால் பிரச்னை ஒன்றுதான். அதுதான், புறக்கணிப்பு. எங்கெல்லாம் புறக்கணிப்பு - ஒதுக்குதல் - தீண்டாமை - அடிமைத்தனம் - அநீதி இருக்கிறதோ, அங்கெல்லாம் அதை முறிக்கின்ற மருந்தாக இருப்பதுதான் சமூகநீதி.

தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்போடு சாதிவாரி கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்பட வேண்டும். பட்டியலின - பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்பட வேண்டும். சிறுபான்மையினர் இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்பட வேண்டும். இதையெல்லாம் அகில இந்திய ரீதியில் கண்காணித்து, உறுதி செய்ய அனைத்து கட்சி எம்.பிக்கள் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும். இதனையெல்லாம் அகில இந்திய அளவில் சமூகநீதியில் ஆர்வம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒற்றுமையாக இணைந்து மக்கள் நலனுக்காகச் செயல்பட வேண்டும். சமூகநீதி காவலர் வி.பி.சிங் சிலை திறப்பு நாளில் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டிய உறுதிமொழி; "இந்தியா முழுமைக்கும் வாழும் பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடியின - சிறுபான்மை - விளிம்பு நிலை மக்களுடைய உயர்வுக்கான 'அரசியல் செயல்திட்டங்கள்' 'அரசின் செயல்திட்டங்களாக' மாற்றி அமைக்க இன்றைக்கு உறுதி ஏற்போம். 'வி.பி.சிங் மறையலாம். அவர் ஏற்றி வைத்த சமூகநீதி தீபம் அணையாது. அவரை யார் மறந்தாலும், தமிழ்நாடு மறக்காது. திராவிட மாடல் அரசு மறக்காது.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் உத்தர பிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ், வி.பி.சிங் குடும்பத்தினர், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன் மற்றும் அமைச்சர்கள், எம்பி, எம்எல்ஏக்கள், தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, மதிமுக பொதுச் செயலாளர் வை.கோ, இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொகிதீன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

▶ சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலைலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து, கலைவாணர் அரங்கத்தில் நடந்த விழாவில் சிறப்புரையாற்றினார். அருகில், உ.பி. முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ், வி.பி.சிங் துணைவியார் சீதா குமாரி, மகன் அஜயா சிங், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, தலைமை செயலாளர் சிவ் தாஸ் மீனா.

### ஒன்றிய அரசு துறை செயலர்களில் 89 பேரில் 85 பேர் உயர் சாதியினர்

பல்கலைக்கழக மானியக்குழு இணை இயக்குநர் பதவிக்கு இடஒதுக்கீடே கிடையாது. ஒன்றிய அரசின் துறை செயலாளர்கள் 89 பேரில் 85 பேர் உயர்சாதியினர். கூடுதல் செயலாளர்கள் 93 பேரில், 82 பேர் உயர்சாதியினர். பிற்படுத்தப்பட்டவர் கிடையாது. ஒன்றிய அரசு துறைகளின் இணை செயலாளர்கள் 275 பெயரில், 19 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள். அசாம், உத்தரபிரதேசம், சட்டீஸ்கர், ஜார்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்களில் இருக்கின்ற மத்திய சட்டப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கையில் இந்த ஆண்டு வரை இடஒதுக்கீடே இல்லாத நிலைதான் நீடிக்கிறது. 45 மத்திய பல்கலைக்கழகங்களில், பிற்படுத்தப்பட்ட பிரிவை சேர்ந்த பேராசிரியர்கள் 4 விழுக்காடு மட்டும்தான். இப்படித்தான் பல்வேறு துறைகளில் இன்றைக்கும் நிலைமை இருக்கிறது.

சரி, நீதிமன்றங்களில் சமூகநீதியின் நிலை என்ன? 2018 முதல் 2023 வரை நாடு முழுவதும் உயர் நீதிமன்றங்களில் நியமிக்கப்பட்ட 604 நீதிபதிகளில், 72 பேர் மட்டும்தான் பிற்படுத்தப்பட்ட பிரிவை சேர்ந்தவர்கள். ஆனால், 458 பேர் பொதுப்பிரிவை சேர்ந்தவர்கள். உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படவில்லை. ஏன், அரசு துறைகளின் பதவி உயர்வுகளின் போது இடஒதுக்கீடு முறை நடைமுறைப்படுத்தபடவில்லை. இந்த நிலையை எல்லாம் மாற்றுவதற்குதான் நாம் தொடர்ந்து உழைக்க வேண்டும். என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

### உ.பி., முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ் பெருமிதம்

# மண்டல் கமிஷனை அமல்படுத்த முதல் குரல் கொடுத்தவர் கலைஞர்தான்

**சென்னை, நவ.28:** முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலை திறப்பு விழாவில் உத்தரபிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ் பேசியதாவது:

மண்டல் கமிஷனின் பரிந்துரைகள் எவர் கண்ணிலும் நீண்ட நாட்களாக படாத நிலையில் அதை செயல்படுத்த வி.பி.சிங் முடிவு செய்தார். இந்த புரட்சி தென்னிந்தியாவில் பெரியார், கலைஞர் ஆகியோரின் குரலில் இருந்து தொடங்கியது. கலைஞர் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக குரல் தொடுத்தவர். தலித் மக்களுக்காக அம்பேத்கர் குரல் கொடுத்தார். அடித்தட்டு மக்களுக்காக பாடுபட்டார். அதன் வெளிப்பாடுதான் மண்டல் கமிஷன் பரிந்துரையை வி.பி.சிங் அமல்படுத்தியது. கலைஞரை போல் அவரது மகன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏழை எளிய அடித்தட்டு மக்களுக்காக பாடுபட்டு வருகிறார்.

இந்த விஷயத்தில் வி.பி.சிங்குடன் கைகோர்த்து சென்றது தென்னிந்தியாவில் கலைஞர் மட்டுமே. அதனால்தான் மண்டல் கமிஷன் சாத்தியமானது. வி.பி.சிங் எந்த சட்டசபையில் முதல்வராக பணியாற்றினாரோ அதே இடத்தில் நாங்களும் பணியாற்றுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வரலாற்று சிறப்பு மிக்க கல்லூரியில் அவரது சிலை தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டிருப்பது உத்தரபிரதேச மக்களுக்கும் ஏன் பீகார், அரியானா என அனைத்து வடமாநில மக்களும் தமிழ்நாடு அரசுக்கு பாராட்டுகளை தெரிவிப்பார்கள்.

இந்த வங்கக்கடல் ஓரத்தில் முதல்வர் படித்த கல்லூரியிலேயே வி.பி.சிங் சிலை அமைக்கப்பட்டுள்ளது. வி.பி.சிங் எந்த மாநிலத்திலிருந்து பிரதமராக வந்தாரோ அதே மாநிலத்தில் உள்ள மக்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மிகப்பெரிய பணியை செய்துள்ளார். இதன் மூலம் வி.பி.சிங்கை பெருமைப்படுத்தியுள்ளார். இதற்காக அவருக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வரும் நாடாளுமன்ற தேர்தலில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் இந்த பணி எதிரொலிக்கும். உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

# பிறப்பில் பாகுபாடு பார்த்தால் எப்படி அங்கு நடுநிலை இருக்கும்

## வி.பி.சிங் மகன் அஜயா சிங் பேச்சு

வி.பி.சிங் மகன் அஜயா சிங் பேசியதாவது:

இந்த நாள் எனக்கு சிறந்த நாள், என் இதயத்தில் இருந்து நன்றி கூறுகிறேன். இங்கு என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. அதனால் என் மகள் 1995 அல்லது 1996ல் என் தந்தை ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் இருந்த போது உருவாக்கிய பேச்சை என்னிடம் அளித்தார். அதனை இங்கே பகிர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இந்த பேச்சுக்கு பிறகு 4 மாதத்தில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில், 'இந்தியாவில் சமூகம் மற்றும் அரசியல்' என்ற பாடத்திட்டம் உருவாக்கப்பட்டது. மிக நீளமான அப் பேச்சை சுருக்கி கூறுகிறேன்.

ஜனநாயகம் என்பது வெறும் வாக்குச் சீட்டு மட்டும் அல்ல, அது அரசாங்கத்தில் உள்ள மனிதனின் மாண்பு. ஒருவரின் கால் மற்றொருவரின் தலை மீது இருந்தால் அது எப்படி ஜனநாயகம் ஆகும். ஒருவனை பிறப்பால் பாகுபாடு பார்த்தால் எப்படி அங்கு நடுநிலை இருக்கும். இதை எல்லாம் ஒழிக்க வேண்டும் என்றால் அரசு மட்டும் போதாது, இட ஒதுக்கீடு போன்ற வையே இதை ஒழிக்க உதவியாக இருக்கும் என்று அவர் கூறினார்.

என் தந்தைக்கு இத்தகைய மரியாதை அளித்ததற்கு மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய குடும்பம் நீங்கள் செய்ததை எப்போதும் மறக்காது.


இந்திய ரிசர்வ் வங்கி
சொத்துடைமைத்துறை
சென்னை-600 001
தொலைபேசி:044-25399066
www.rbi.org.in

**இ-டெண்டரை வரவேற்பதற்கான அறிவிப்பு:**

**இ-டெண்டர் எண்: RBI/Chennai Regional office/Estate/14/23-24/ET/237 [REPAIRSWATERPROOFINGMOP]**

இந்திய ரிசர்வ் வங்கி, சென்னையிலுள்ள தனது வங்கியின் முதன்மை அலுவலகக் கட்டிடத்தில் பழுதுபார்ப்பு மற்றும் நீர்ப்புகா வேலைக்கு (Repair and Water Proofing works) தகுதியான ஒப்பந்ததாரர்களிடம் இருந்து இ-டெண்டர் முறையில் இரண்டு பகுதிகளாக டெண்டர்களை வரவேற்கிறது. மதிப்பிடப்பட்ட செலவு ₹ 24.73 லட்சம் . 03 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். டெண்டரை/ஏலத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் ஜனவரி 08, 2024, 11.00 மணி. டெண்டர் படிவங்கள் மற்றும் ஏல விவரங்களுக்கு எங்களின் வலைத்தளமான www.rbi.org.in இல் 'டெண்டர்' லிங்க்கின் கீழ் அல்லது https://www.mstcecommerce.com/eproc/ அல்லது www.itj.gov.in என்ற வலைத்தளங்களை பார்க்கவும்.

மேலும், திருத்தம்/சேர்க்கை ஏதேனும் இருந்தால் வங்கியின் வலைத்தளமான www.rbi.org.in இல் 'டெண்டர்கள்' மற்றும் https://www.mstcecommerce.com/eproc/ வலைத்தளத்தில் பதிவேற்றப்படும். ஏதேனும் அல்லது அனைத்து டெண்டர்களையும் நிராகரிக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

சென்னை
தேதி: 28-11-2023

உமா சங்கர்
மண்டல இயக்குநர்


### சீனாவில் பரவி வரும்

# புதுவகை நிமோனியா காய்ச்சல் தமிழ்நாட்டில் பரவவில்லை

## பொது சுகாதாரத்துறை இயக்குநர் தகவல்

**சென்னை, நவ. 28:** சீனாவில் பரவிவரும் புதிய வகை நிமோனியா காய்ச்சல், தமிழகத்தில் பரவவில்லை என பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வ விநாயகம் தெரிவித்துள்ளார். தொற்றுநோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது குறித்து சுகாதாரத் துறை முதன்மை செயலாளர் ககன்தீப் சிங் பேடி ,பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் மற்றும் தொற்றுநோய் தடுப்பு அதிகாரிகள் நேற்று ஆலோசனையில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் கூறியதாவது: சீனாவில் பரவி வரும் புதிய வகை நிமோனியா காய்ச்சல் தமிழகத்தில் பரவ வில்லை. எனவே பயப்பட தேவை இல்லை. இருப்பினும் தொற்றுநோய் பரவாமல் தடுக்க எதுபோன்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்த இருக்கிறோம் . இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சீர்மரபினர் நல வாரிய தலைவர், உறுப்பினர்கள் நியமனம்

**சென்னை, நவ. 28:** பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: சீர்மரபினர் நல வாரியம், அரசாணையின்படி, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தலைவராகவும், ராசா.அருண்மொழித்துணை தலைவராகவும், கே.எஸ்.ராஜ்கவுண்டர், சேகர், பசுவை சக்திவேல், முனுசாமி, எஸ்.கணேசன், கே.எஸ்.கண்ணன், கதிர்வேல், பண்ணப்பட்டி கோவிந்தராஜ், ப.சந்திரன், சூர்யா பி.தங்க ராஜா, பெரி.துரைராசு, பாண்டீஸ்வரி மற்றும் பெரியசாமி ஆகிய 13 அரசு சாரா உறுப்பினர்களை நியமனம் செய்து 3 ஆண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.


muthoot HOUSING FINANCE

**முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்**

**பதிவு அலுவலகம்: டி.சி. எண் 14/2074-7, முத்தூட் மையம், புன்னேன் சாலை, திருவனந்தபுரம் - 695 034, CIN எண்-U65922KL2010PLC025624. கார்ப்பரேட் அலுவலகம்: 12/A 01, 13வது தளம், பரினீ கிரெஸ்சென்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்-G பிளாக் (கிழக்கு), மும்பை-400051 தொலைபேசி எண்: 022-62728517, அதிகாரப்பூர்வ அதிகாரி மின்னஞ்சல் முகவரி: authorised.officer@muthoot.com, தொடர்பு நபர்:- உஸ்மான் கனி - 9843377165.**

**பொது அறிவிப்பு - சொத்து ஏலம் மற்றும் விற்பனை**

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இல் அமல்படுத்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்டின் (இனிமேல் "நிறுவனம்" ஆக குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரி கீழே குறிப்பிடப்பட்ட சொத்துகள் (இனிமேல் "கடனீட்டுச் சொத்து" ஆக குறிப்பிடப்படும்) மேலும் கீழ்க்குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு (இனிமேல் "கடன்தாரர்கள்" ஆக குறிப்பிடப்படுவர்) வழங்கிய வீட்டுக் கடன் வசதிகளுக்கான கடனிடாக வைத்திருப்பதை சுவாதீனம் செய்துள்ளார் மேற்கொண்டு கடன்தாரர்கள் மூலமான மிகைபாக்கியின் இறுதி பணப்பட்டுவாடா வரையான அதற்குரிய மேற்கொண்டு வட்டி மற்றும் செலவுகளுடன் கீழ்க்காணும் தொகைக்குரிய கடனீட்டுக் கடன் தொகை நிமித்தம் பொதுமக்களிடமிருந்து முத்தீர்மையிப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று "உள்ளது உள்ளவிதத்தில்", "உள்ளது உள்ளவாறு", "உள்ளது எதுவோ அது" மற்றும் "உதவிசாரா" அடிப்படை/நிபந்தனைகளில் கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கடன்தாரர்/கள் பெயர் & க.க.எ. | சுவாதீனம் வகை & நாள் | மொத்த நிலுவைத்தொகை (₹) பொருந்தும் எதிர்கால வட்டி | நிர்ணய விலை (₹) | முன்வைப்புத் தொகை (₹) |
|---|---|---|---|---|---|
| 1 | க.க.எ. எண்: 11145091598<br>1. ராமச்சந்திரன் சுப்ரமணியன், 2. R. புனிதா ஜெயபால் | அக்கப்பூர்வ சுவாதீனம்-<br>12-டிசம்பர்-2022 | 16-நவம்பர்-2023<br>தேதிபன்று ₹.4,97,127.99/- | 7,50,000/- | 75,000/- |

**பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்) /அசையா சொத்துக்கள் (கள்) பற்றிய விளக்கம் -** S எண் 175/3 & 176/1 வார்டு எண். 1 களத்து, மேட்டு தெரு வடக்கு வீரவநல்லூர், வடக்கு வீரவநல்லூர் SRO, சேரன்மாதேவி தாலுகா, திருநெல்வேலி- 627426, தமிழ்நாடு, இந்தியா.

**பார்வையிடும் நாள் & நேரம்:** 15-டிசம்பர் -2023 & 16-டிசம்பர்-2023 காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை

**ஏலத் தேதி:** 03-ஜனவரி-2024 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை & ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 02-ஜனவரி-2024

**விற்பனை இடம்-** T.S.P வளாகம் 2வது தளம், எல்கிஸ் நகர் 70 அடி சாலை சந்திப்பு, ராஜா சர் முத்தையா நகர், பை பாஸ் சாலை, மதுரை, தமிழ்நாடு -625016.

**திட்டமிடும் ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சொத்துகளை பார்வையிடலாம்.**

**பொது ஏலம் விதிமுறைகள் & நிபந்தனைகள்:- 1)**

விற்பனையானது கண்டிப்பாக பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் வழிகாட்டுதல் நடைமுறையின்படி இதன்கீழ் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் & திட்டமிடும் ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்ப வேண்டிய ஏலப்புள்ளி/ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது. 2) சொத்து "உள்ளது உள்ளவிதத்தில்" மற்றும் "உள்ளது உள்ளவாறு" "உள்ளது எதுவோ அது" மேலும் "உதவிசாரா" நிபந்தனையில், வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவை உட்பட விற்பனை செய்யப்படும். 3) ஏலத்திலான சொத்துகளை மேலே குறிப்பிட்ட நாள் & நேரத்தில் பார்வையிடலாம். சொத்துகளை பார்வையிடுதல் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து விசாரணைகளுக்கு, மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்களில் சம்பந்தப்பட்ட இடங்களிலான அதிகாரப்பூர்வ அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். ஆர்வமுள்ள வாங்குவோர் நிர்ணய விலையின் 10% முன்வைப்புத்தொகைக்காக (EMD), "முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்" பெயரில் மும்பையில் மாற்றத்தக்க கேட்பு வரைவோலையுடன் ஒரு முத்திரையிட்ட உறையில் மேற்கூறிய சொத்துக்கான அவர்தம் ஒப்பந்தப்புள்ளிகளை அனுப்பலாம். 4) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுடன், திட்டமிடும் ஏலதாரர் வருமானவரித் துறையால் வழங்கப்பட்ட பான் அட்டை மற்றும் ஏலதாரரின் அடையாளச் சான்று மேலும் இருப்பிடச் சான்றின் நகல்பிரதி அதாவது கடவுச்சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுனர் உரிமம், ஏனையவை போன்றவற்றின் நகல் ஒன்றையும் இணைக்க வேண்டும். 5) சொத்து நிர்ணய விலைக்கு குறைவாக விற்கப்பட சாத்தியமில்லை. 6) ஏலத்தில் ஆஜராகும் ஏலதாரர்கள் நிர்ணயித்த நிர்ணய விலைக்கு கூடுதலாக ₹10000/- மடங்கில் அவர்தம் ஒப்பந்தப்புள்ளியை உயர்த்த அனுமதிக்கப்படுவர். 7) அனைத்து நிலுவைகள் மற்றும் செலவுகள், அதாவது நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கம் கட்டணங்கள், மின்சாரம் மற்றும் குடிநீர் வரிகள் அல்லது ஏதேனும் பிற நிலுவைகள் முத்திரைத்தாள் தீர்வை, பதிவுக் கட்டணங்கள், பெயர்மாற்றம் கட்டணங்கள